மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 89/2020 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செல்வராஜ் | நாள் | 12.08.2024 |
| தகப்பனார் பெயர் | சவரி முத்து | | |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

18) என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், 1ம் பிரதிவாதி நான் கிரயம் பெற்றுள்ள நிலத்தில், தனக்கு உரிமையுள்ளதாக கூறி என்னுடன் தகராறு செய்வதால், அவருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வேறு எந்த பரிகாரமும் நான் இவ்வழக்கில் கோரவில்லை என்றால், சரிதான். அவ்வாறு வேறு ஏதேனும் பரிகாரங்கள் கோரியிருந்தால், அது தவறானது என்றால், சரிதான்.

19) யார் யார் மீது இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், 1ம் பிரதிவாதி மீதும், நகராட்சி மீதும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நபர்களை தவிர்த்து வேறு யாரேனும் மீது நான் வழக்கு தாக்கல் செய்திருந்தால், அது தவறானது என்றால், சரிதான். மேட்டூர் நகராட்சிக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், எங்கள் நிலத்தை அளந்து கொடுக்கவேண்டும் என கோரி பதிகாரம் கேட்டுள்ளேன்.

20) என் பிரமாண பத்திரிக்கையுடன் என்னென்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால், பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அது என்ன பத்திரம் என சரியாக நினைவில்லை. மொத்தம் எத்தனை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால், மொத்தம் மூன்று ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். மூன்று ஆவணங்களுக்கு மேல் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்திருந்தால், அது தவறானது என்றால், சரிதான்.

21) மேற்படி மூன்று ஆவணங்களும் என்ன ஆவணங்கள் என்றால், சொத்தின் உரிமைமாற்று ஆவணங்கள். அது தவிர நான் வரி ரசீதுகள், மின் கட்டண ரசீதுகள்,

குடிநீர் கட்டண ரசீதுகளை கொடுத்துள்ளேன். மேற்படி ரசீதுகள் யார் பெயரில் உள்ளது என்றால், முகமது உஷேன் பெயரில் உள்ளது. என் பெயரில் எதுவும் இல்லை என்றால், என் பெயரில் மாற்றப்படவில்லை. தாவா சொத்து தொடர்பாக இதுவரை என் பெயரில் எந்த ரசீதுகளும் இல்லை என்றால், சரிதான்.

22) மேற்படி முகமது உஷேன் பெயரில் எந்த வருடத்திலிருந்து வரி ரசீதுகள் உள்ளது என்றால், கடந்த 2013ம் வருடத்திலிருந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி முகமது உஷேன் பெயரில் 2013ல் எந்த ரசீதுகளும் தாக்கல் ஆகவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. என் பிரமாண பத்திரிக்கையில் 2018ல் இருந்துதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. இவ்வழக்கு குறித்து எனக்கு எவ்வித முழுமையான சங்கதிகளும் தெரியவில்லை என்றாலும், தவறான சங்கதிகளின் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழகை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

23) என் வீட்டின் கதவு எண் என்னவென்றால், க.எண்.13–A ஆகும். மேற்படி கதவு எண் என் முன் விற்பனையாளர் என நான் சொல்லும் மேற்படி முகமது உஷேன் என்பவரிடமிருந்து தொடர்ந்து என் பெயரில் இருந்து வருகிறதா அல்லது புதிதாக என் பெயரில் நகராட்சியால் வழங்கப்பட்டதா என்றால், மேற்படி முகமது உஷேனிடமிருந்து, தேவராஜ் என்பவர் மேற்படி சொத்தை வாங்கிய போதும், மேற்படி தேவராஜிடமிருந்து நான் சொத்தை பெறும் பொழுதும், வீட்டின் கதவு எண்.13–A தான்.

24) 1ம் பிரதிவாதி சொத்து தொடர்பாக என்னுடன் மட்டும் தான் தகராறு செய்ததாக நான் கூறுகிறேன் என்றால், சரிதான். என் முன் விற்பனையாளர்களாக நான் சொல்லும், தேவராஜ் மற்றும் முகமது உஷேனிடம் 1ம் பிரதிவாதி தாவா சொத்து தொடர்பாக ஏதேனும் தகராறு செய்தாரா என்றால், இல்லை. அவ்வாறு என்னை தவிர மேற்படி என் முன் விற்பனையாளர்களிடமும் 1ம் பிரதிவாதி தகராறு செய்ததாக நான் என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியிருந்தால், அது தவறானது என்றால், மேற்படி

நபர்களிடமும் சிறு சிறு தகராறுகள் செய்வார். ஆனால், என் மீது மட்டும் தான் பல்வேறு புகார்களை அளித்து வருகிறார்.

25) நானும், 1ம் பிரதிவாதியும் ஒரே துறையில் சுமார் 20 ஆண்டுகளாக ஒன்றாக பணியாற்றினோம். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் இருவரும் நடத்துனராக பணியாற்றினோம் என்றால், சரிதான். மேட்டுர் பணிமனையில் இருவரும் ஒன்றாக பணியாற்றினோம் என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்திற்கு அருகில் எவ்வளவு காலமாக வசித்துவருகிறார் என்றால், சுமார் 20 வருடங்களுக்கு மேலாக வசித்து வருகிறார். நான் தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்னர் 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று வந்துள்ளேன். அப்போது 1ம் பிரதிவாதியின் வீடு ஓட்டு வீடா அல்லது மெத்தை வீடா என்றால், தற்போது உள்ள அதே மெத்தை வீடு தான். மேற்படி மெத்தை வீடு தற்போது வரை எந்த மாற்றமும் செய்யப்படாமல் உள்ளது என்றால், சரிதான்.

26) 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு எந்த பக்கத்தில் நான் வீடு வாங்கியுள்ளேன் என்றால், மேற்கு புறத்தில் வாங்கியுள்ளேன். 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு வடக்கு புறம் 7 அடி அகலத்திலும், கிழக்கு புறத்தில் 4 அடி அகலத்திலும், தெற்குபுறத்தில் 3 அடி அகலத்திலும் நடைபாதை விட்டுதான் 1ம் பிரதிவாதி தன் வீட்டை கட்டியுள்ளார் என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு வடக்கு புறத்தை ஒட்டியவாறே சாக்கடை உள்ளது. கிழக்கு புறத்தில் எவ்வித சந்தும் இல்லை. தெற்கு புறத்தில் சிறிய அளவில் சந்து உள்ளது. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. மேற்கு புறத்தில் 4 அடி சந்து விட்டுதான் 1ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றால், சரியல்ல.

27) 1ம் பிரதிவாதியின் எத்தனை அடுக்குகளை கொண்டுள்ளது என்றால், இரண்டு மாடி வீடு ஆகும். 1ம் பிரதிவாதி மேல் வீட்டிலுள்ள கழிவுநீரானது, அவரது வீட்டின் வழியாகத்தான் கீழ் இறக்கப்பட்டு பாதாள சாக்கடையை அடைகிறது என்றால், சரியல்ல. என் வீட்டின் வழியாகத்தான் மேற்படி சாக்கடை நீர் வருகிறது. நான் சொல்வது

தவறானது என்றாலும், மேற்கு புறத்தில் 1ம் பிரதிவாதிக்கு உள்ள 4 அடி சந்தின் வழியாகத்தான் மேற்படி கழிவுநீர் சாக்கடைக்கு கொண்டு செல்லப்படுகிறது என்றாலும், சரியல்ல.

28) நான் அ.இ.அ.தி.மு.க அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்றால் சரியல்ல. நான் எந்த அரசியல் கட்சியிலும், எந்த பொறுப்பிலும் இல்லை. 1ம் பிரதிவாதி எந்த அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்றால், தி.மு.க அரசியல் கட்சியை சேர்ந்தவர். 2020ம் வருடத்தில் எந்த கட்சி ஆளும் கட்சி என்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியாது. 1ம் பிரதிவாதி ஆட்களை கூட்டி வந்து, மிரட்டியதாக நான் சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்துள்ளேனா என்றால், இல்லை. 1ம் பிரதிவாதியுடன் யார் யார் வந்து என்னை மிரட்டினார்கள் என்றால், பெயர்கள் எனக்கு சரியாக தெரியவில்லை.

29) 2020ம் வருடத்தில் நான் அரசியல் செல்வாக்கு கட்சியை சேர்ந்தவர் என்றாலும், உள்ளூரில் செல்வாக்குடன் உள்ள நபர் என்றாலும், 1ம் பிரதிவாதி என்னை மிரட்ட வேண்டிய எவ்வித தேவையும் இல்லை என்றாலும், சரியல்ல. 1ம் பிரதிவாதி ஆட்களுடன் வந்து மிரட்டியதாக நான் சொல்லும் நிலையில், பின் என்ன நடந்தது என்றால், அவர்கள் அக்கம் பக்கத்தினர் சமாதான படுத்தியதால் கலைந்து சென்றுவிட்டனர்.

30) 1ம் பிரதிவாதியின் நிலம் பட்டா நிலம் என்றால், சரிதான். 1ம் பிரதிவாதிக்கு அரசாங்கத்தால் சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், கடந்த 2019ம் வருடத்தில் 0.2–1/2 சென்ட் நிலம் வழங்கப்பட்டுள்ளது. நான் வசித்து வரும் பகுதியிலுள்ள சுமார் 50 குடும்பங்களுக்கு 2019ம் வருடத்தில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. என் முன் விற்பனையாளர் முகமது உஷேன் என்பவர் நீரோடை புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து, தாவா சொத்தை கட்டியுள்ளதால்தான் அவருக்கு அரசாங்கத்தால் பட்டா எதுவும் வழங்கப்படவில்லை என்றால், சரியல்ல.

31) கடந்த 2018ம் வருடத்தில் தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் மேற்படி முகமது உஷேன் என்பவர் சிறிய கூரை சாலையை மட்டும் அமைத்திருந்தார் என்றாலும், அதனருகே ஊர் மக்கள் அனைவரும் குப்பைகளை கொட்டி வந்தனர் என்றாலும், அதனால், பட்டா எதுவும் வழங்கப்படவில்லை என்றாலும், சரியல்ல. தாவா சொத்து அமைந்துள்ள பகுதி ஓடை புறம்போக்கு நிலம் என்றாலும், அதை ஆக்கிரமித்துதான் தாவா சொத்து அமைந்துள்ளது என்றாலும், சரியல்ல.

32) தாவா சொத்து அமைந்துள்ள நிலத்தை நான் விலைக்கு வாங்கி, அதை புணரமைத்து நான் தான் அதில் சிமெண்ட் அட்டை போட்ட வீடு கட்டியுள்ளேன் என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்குபுறம் சூரிய ஒளி தடுக்கும் தடுப்பு உள்ளது என்றால், சரியல்ல. மேற்படி பகுதியில் ஜன்னலே கிடையாது. 1ம் பிரதிவாதி 2அடி அகலத்திற்கு மேற்படி தடுப்பை அமைத்துதான் வீடு கட்டியுள்ளார் என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கு புறத்தை தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் மதில்சுவர் உள்ளது என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு மேற்குபுறத்தில் காலியிடம் இருந்தும் மேற்படி பகுதியில் குப்பைகளை கொட்டுவதால் அவர் மதில் சுவர் கட்டவில்லை என்றால் சரியல்ல.

33) 1ம் பிரதிவாதி தன் பட்டா நிலத்தில் தான் வீடு கட்டியுள்ளார் என்றால், பட்டா நிலம் போக 1/2 சென்ட் நிலத்தை ஆக்கிரமித்து கட்டியுள்ளார். அளந்து பார்த்துள்ளேனா என்றால், இல்லை. 1ம் பிரதிவாதியே சொல்லியுள்ளார். அரசாங்கத்தால் 0.02– 1/2 சென்ட் நிலத்திற்குதான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். என் முன்விற்பனையாளர் தேவராஜிடமிருந்து நான் காலியிடத்தை தான் பெற்றேனா என்றால், இல்லை. அதில் சிமெண்ட் அட்டை போட்ட வீட்டுடன் பெற்றேன். 600 சதுரடி அளவுள்ள நிலத்தை மட்டும் தான் நான் தேவராஜிடமிருந்து பெற்றேனா என்றால், இல்லை. 1200 சதுரடி நிலத்தை பெற்றேன். தாவா சொத்தை என்ன விலை கொடுத்து பெற்றேன் என்றால், ரூ.10 லட்சத்திற்கு பெற்றேன்.

34) தாவா சொத்து அமைந்துள்ள நிலம் எந்த வகைபாடு கொண்டது என்றால், நத்தம் புறம்போக்கு நிலம் ஆகும். நான் சொல்வது தவறானது என்றாலும், தாவா சொத்து நீரோடை புறம்போக்கு நிலம் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் நீள, அகலம் என்னவென்றால், தென்வடல் இருபுறம் 60 அடியும், கிழமேல் இருபுறம் 20 அடியும், மொத்தம் 1200 சதுரடி கொண்டது. நான் சொல்லும் அளவை விட தாவா சொத்தின் கிழபுற பகுதியில் கூடுதல் நிலம் இருந்தால், அது 1ம் பிரதிவாதியின் நிலம் என்றால், கூடுதல் நிலம் இருக்க வாய்ப்பே இல்லை. அவ்வாறு இருந்தால், நான் 1ம் பிரதிவாதியின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக அர்த்தம் என்றால், சரியல்ல.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.